## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கல்வி – விடுதிகள் – 100 பழங்குடியினர் விடுதிகள் மற்றும் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு நவீன ஈர அரவை இயந்திரங்கள் வழங்கிட நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்(ஆதிந.4)துறை**

அரசாணை(நிலை) எண்.129

நாள்.21.12.2020
சார்வரி, மார்கழி மாதம் 6–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2051.

படிக்கப்பட்டது.

பழங்குடியினர் நல இயக்குநரின் கடித எண்.பமே/ஈ1/2715/2020, நாள்.07.04.2020.

*********

ஆணை:-

மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்கள் 2020–2021–ஆம் ஆண்டிற்கான வரவு செலவு கூட்டத் தொடரில் மானிய கோரிக்கை மீதான விவாதத்தின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:-

**“ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கி கல்வி பயிலும், மாணவ, மாணவியருக்கு சிற்றுண்டி வழங்கிடும் பொருட்டு 10 ஆண்டுகளுக்கு முன் வழங்கப்பட்ட ஈர அரவை இயந்திரங்கள் பழுதடைந்த நிலையில் இருப்பதால், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, முதற்கட்டமாக 150 ஆதிதிராவிடர் நல விடுதிகள் மற்றும் 43 பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் 57 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் என மொத்தம் 250 விடுதிகள் மற்றும் பள்ளிகளுக்கு தலா ரூ.40000/– வீதம் ரூ.1 கோடி மதிப்பீட்டில் நவீன அரவை இயந்திரங்கள் வழங்கப்படும்.”**

2. மேற்காணும் அறிவிப்பின் அடிப்படையில், மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் பழங்குடியினர் நல இயக்குநர் இத்துறையின் கீழ் 312 பழங்குடியினர் உண்டி உறைவிட பள்ளிகள் மற்றும் 43 பழங்குடியினர் நல விடுதிகள் இயங்கி வருவதாகவும், மேற்படி பள்ளிகள் மற்றும்

விடுதிகளுக்கு பல்வேறு காலகட்டங்களில் அரவை இயந்திரங்கள் வழங்கப்பட்டன என்றும், இவற்றில் பல 10 ஆண்டுகளுக்கு மேலாகி பழுதடைந்த நிலையில் உள்ளதால் கட்டணம் செலுத்தி மாவு அரைக்கப்படுவதால் அதற்கான செலவினத்தை குறைக்கும் பொருட்டு முற்றிலும் பழுதடைந்த நிலையில் உள்ள 43 பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் 57 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கி பயிலும் மாணாக்கர்களின் நலன் கருதி சிறப்பான சிற்றுண்டி வழங்கும் பொருட்டு ஒரு நவீன ஈர அரவை இயந்திரம் ரூ.40,000/–ற்கு மிகாமல் மொத்தம் ரூ.40.00 இலட்சம் செலவில் 100 நவீன ஈர அரவை இயந்திரங்களை வாங்கி வழங்கிட ஏதுவாக ஆணை பிறப்பிக்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து அதனை ஏற்று, 43 பழங்குடியினர் விடுதிகள் மற்றும் 57 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு 10 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு நவீன ஈர அரவை இயந்திரம் ரூ.40,000/–ற்கு மிகாமல் இணைப்புகளில் குறிப்பிட்டுள்ள விடுதிகள் மற்றும் உண்டி உறைவிட பள்ளிகளுக்கு வாங்கி வழங்குவதற்கு ரூ.40,00,000/– (ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்) கீழே குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

i. நவீன ஈர அரவை இயந்திரங்கள் தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்த புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–இன்படி கொள்முதல் செய்யப்பட வேண்டும்.
ii. இத்திட்டத்திற்கென ஒப்பளிக்கப்பட்ட தொகையில் செலவினம் போக மீதம் இருப்பின் அத்தொகையினை அரசு கணக்கில் உடனடியாக ஒப்படைப்பு செய்ய வேண்டும்.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை பின்வரும் கணக்கு தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

| வ.எண் | கணக்குத் தலைப்பு | ரூபாய் |
|---|---|---|
| 1. | 2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 02 பழங்குடியினர் நலன் – 277 கல்வி – மாநிலச் செலவினங்கள் – AF பழங்குடியினர் மாணவர் இல்லங்களைப் பராமரித்தல் –319 – இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல்<br>IFHRMS த.தொ.கு 2225 02 277 AF 31901<br>பழைய த.தொ.கு 2225 02 277 AF 1918 | 17,20,000/– |
| 2. | 2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 02 பழங்குடியினர் நலன் – 277 கல்வி – மாநிலச் செலவினங்கள் – AA பள்ளிகள் –319 – இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல்<br>IFHRMS த.தொ.கு 2225 02 277 AA 31901<br>பழைய த.தொ.கு 2225 02 277 AA 1918 | 22,80,000/– |

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு ‘புது துணைப் பணி’ குறித்த (New Instrument of Service) செலவினமாகும். இச்செலவினத்திற்கு நாளடைவில் சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வரவு–செலவு பொது–I) துறையால் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து செலவு செய்ய தேவையான தொகைக்கு செயற்குறிப்பினை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதித் (வரவு–செலவு பொது I) துறைக்கு விண்ணப்பிக்கும்படி பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினம் மீது சட்டப்பேரவையின் ஒப்புதல் பெறும் பொருட்டு 2020–2021–ஆம் ஆண்டின் துணை மதிப்பீடுகளில் சேர்க்க ஏதுவாக துணை மானிய குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதித்(வரவு–செலவு பொது–I/ஆதி(ம)பந) துறைக்கு அனுப்பி வைக்குமாறும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை பெற்று, அதில் தெரிவித்துள்ள நிபந்தனைகள் மற்றும் நடைமுறையில் உள்ள விதிமுறைகளை பின்பற்றி நவீன ஈர அரவை இயந்திரங்களை வாங்கி சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் மூலமாக இணைப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடுதிகள் மற்றும் பள்ளிகளுக்கு வழங்க பழங்குடியினர் நல இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. இவ்வரசாணையின் இணைப்புகளில் குறிப்பிட்டுள்ள 100 பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு நவீன ஈர அரவை இயந்திரங்கள் வாங்கி வழங்கியதற்கான உரிய அறிக்கையினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா.எண்.46442/நிதித் (ஆதி(ம)பந)/2020, நாள்.18.12.2020 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்க பேரேடு எண்.1145 (ஆயிரத்து நூற்று நாற்பத்து ஐந்து) பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒட்டெம் டாய்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்:–
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–8.
முதன்மை கணக்காயர் (G & SSA), சென்னை–18.
மாநில கணக்காயர், சென்னை–6/35.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை–600 009.

**<u>நகல்:—</u>**

மாண்மிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
அமைச்சர் (ஆதி(ம)பந) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை—600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலர்
அவர்களின் தனிச்செயலர், சென்னை—600 009.
நிதித்(ஆதி(ம)பந/வரவு செலவு பொது –I / வரவு செலவு பொது I / வ.வ.I)துறை, சென்னை – 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந5)துறை,
சென்னை— 600 009.
இருப்பு கோப்பு / உபரி

***//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//***

பிரிவு அலுவலர் 21/12/2020

21/12/2020

## இணைப்பு –I

**அரசாணை(நிலை) எண். 129, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை, நாள்.21.12.2020**

| வ. எண். | விடுதியின் பெயர் | மாவட்டத்தின் பெயர் |
|---|---|---|
| 1 | கல்லூரி மாணவியர் விடுதி, நாகல்கேணி. | சென்னை |
| 2 | மாணவர் விடுதி, சின்ன தடாகம். | கோயம்புத்தூர் |
| 3 | மாணவர் விடுதி, மேல்பாவிபுதூர். | கோயம்புத்தூர் |
| 4 | மாணவியர் விடுதி, பூலுவப்பட்டி | கோயம்புத்தூர் |
| 5 | மாணவர் விடுதி, மாரண்டஹல்லி | தர்மபுரி |
| 6 | மாணவியர் விடுதி, மதிகோன்பாளையம் | தர்மபுரி |
| 7 | மாணவர் விடுதி, நடுப்பட்டி | திண்டுக்கல் |
| 8 | மாணவர் விடுதி, தாண்டிக்குடி | திண்டுக்கல் |
| 9 | மாணவியர் விடுதி, சத்தியமங்கலம் | ஈரோடு |
| 10 | மாணவர் விடுதி, அந்தியூர் | ஈரோடு |
| 11 | மாணவர் விடுதி, மதுராந்தகம் | காஞ்சிபுரம் |
| 12 | மாணவியர் விடுதி, பேச்சிப்பாறை | கன்னியாகுமரி |
| 13 | மாணவியர் விடுதி, பத்துக்காணி | கன்னியாகுமரி |
| 14 | மாணவர் விடுதி, அஞ்செட்டி | கிருஷ்ணகிரி |
| 15 | மாணவியர் விடுதி, தளி | கிருஷ்ணகிரி |
| 16 | மாணவர் விடுதி, செங்கரை | நாமக்கல் |
| 17 | மாணவியர் விடுதி, செங்கரை | நாமக்கல் |
| 18 | மாணவர் விடுதி, நாமக்கல் | நாமக்கல் |
| 19 | மாணவியர் விடுதி, வாழவந்திநாடு | நாமக்கல் |
| 20 | மாணவர் விடுதி, நீர்காச்சிமண்டு | நீலகிரி |
| 21 | கல்லூரி மாணவியர் விடுதி, ஊட்டி | நீலகிரி |
| 22 | மாணவர் விடுதி, ஆனைப்பள்ளம் | நீலகிரி |
| 23 | மாணவியர் விடுதி, அரும்பாவூர் | பெரம்பலூர் |
| 24 | மாணவர் விடுதி, பிள்ளையூர் | சேலம் |
| 25 | மாணவியர் விடுதி, அம்மாப்பேட்டை | சேலம் |
| 26 | மாணவர் விடுதி, மண்ணூர் | சேலம் |
| 27 | மாணவர் விடுதி, நெய்யமலை | சேலம் |
| 28 | மாணவர் விடுதி, பைத்தூர் | சேலம் |
| 29 | மாணவியர் விடுதி, ஏற்காடு | சேலம் |
| 30 | மாணவர் விடுதி, அச்சன்குட்டன்பட்டி | சேலம் |
| 31 | மாணவியர் விடுதி, ஜமுனாமரத்தூர் | திருவண்ணாமலை |
| 32 | மாணவியர் விடுதி, நம்மியம்பட்டு | திருவண்ணாமலை |
| 33 | மாணவர் விடுதி, ஆரணி | திருவள்ளூர் |
| 34 | மாணவியர் விடுதி, பெருமாபாளையம் | திருச்சி |

| | | |
|---|---|---|
| 35 | மாணவர் விடுதி, முருகன்பட்டி | திருச்சி |
| 36 | மாணவியர் விடுதி, துறையூர் | திருச்சி |
| 37 | மாணவியர் விடுதி, டாப்செங்காட்டுப்பட்டி | திருச்சி |
| 38 | மாணவர் விடுதி, செங்காட்டுப்பட்டி | திருச்சி |
| 39 | மாணவர் விடுதி, ஒடுக்கத்தூர் | வேலூர் |
| 40 | மாணவர் விடுதி, அத்தனாவூர் | திருப்பத்தூர் |
| 41 | மாணவர் விடுதி, புதுப்பட்டு | விழுப்புரம் |
| 42 | மாணவர் விடுதி, சங்கராபுரம் | விழுப்புரம் |
| 43 | ஐ டி ஐ விடுதி, பி.எஸ். சங்கராபுரம் | விழுப்புரம் |

ஒட்டெம் டாய்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

21/12/2020
பிரிவு அலுவலர்.
21/12/2020

## இணைப்பு –II

**அரசாணை(நிலை) எண்.129 , ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை, நாள்.21.12.2020**

| வ. எண். | உண்டி உறைவிடப் பள்ளியின் பெயர் | மாவட்டத்தின் பெயர் |
|---|---|---|
| 1 | மேல்நிலைப்பள்ளி, சித்தேரி | தருமபுரி |
| 2 | மேல்நிலைப்பள்ளி, வாச்சாத்தி | தருமபுரி |
| 3 | உயர்நிலைப்பள்ளி, நரிப்பள்ளி | தருமபுரி |
| 4 | உயர்நிலைப்பள்ளி, கலசப்பாடி | தருமபுரி |
| 5 | மேல்நிலைப்பள்ளி, ஆசனூர். | ஈரோடு |
| 6 | மேல்நிலைப்பள்ளி, பர்கூர். | ஈரோடு |
| 7 | உயர்நிலைப்பள்ளி, தலமலை | ஈரோடு |
| 8 | உயர்நிலைப்பள்ளி, கெத்தேசால் | ஈரோடு |
| 9 | மேல்நிலைப்பள்ளி, வாழவந்திநாடு. | நாமக்கல் |
| 10 | ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, முள்ளுக்குறிச்சி | நாமக்கல் |
| 11 | பெண்கள் மேல்நிலைப்பள்ளி, முள்ளுக்குறிச்சி | நாமக்கல் |
| 12 | மேல்நிலைப்பள்ளி, செங்கரை. | நாமக்கல் |
| 13 | மேல்நிலைப்பள்ளி, குஞ்சப்பணை. | நீலகிரி |
| 14 | உயர்நிலைப்பள்ளி, பொக்காபுரம் | நீலகிரி |
| 15 | உயர்நிலைப்பள்ளி, தேவாலா | நீலகிரி |
| 16 | உயர்நிலைப்பள்ளி, கரிக்கையூர் | நீலகிரி |
| 17 | மேல்நிலைப்பள்ளி, வெள்ளிக் கவுண்டனூர். | சேலம் |
| 18 | உயர்நிலைப்பள்ளி, அறுநூத்துமலை | சேலம் |
| 19 | உயர்நிலைப்பள்ளி, கரியகோயில்வளவு | சேலம் |
| 20 | மேல்நிலைப்பள்ளி, கருமந்துறை. | சேலம் |
| 21 | உயர்நிலைப்பள்ளி, ஓடைக்காட்டுப்புதூர் | சேலம் |
| 22 | உயர்நிலைப்பள்ளி, கோணமடுவு | சேலம் |
| 23 | உயர்நிலைப்பள்ளி, செம்மநத்தம் | சேலம் |
| 24 | உயர்நிலைப்பள்ளி, பெரியகுட்டிமடுவு | சேலம் |
| 25 | உயர்நிலைப்பள்ளி, இராமப்பட்டி | சேலம் |
| 26 | உயர்நிலைப்பள்ளி, பகடுபட்டு | சேலம் |
| 27 | உயர்நிலைப்பள்ளி, தேக்கம்பட்டு | சேலம் |
| 28 | நடுநிலைப்பள்ளி, அடிமலைபுதூர் | சேலம் |
| 29 | நடுநிலைப்பள்ளி, வாழவந்தி | சேலம் |
| 30 | நடுநிலைப்பள்ளி, குன்னூர் | சேலம் |
| 31 | நடுநிலைப்பள்ளி, கொடுங்கல் | சேலம் |
| 32 | தொடக்கப்பள்ளி, ஓடைக்காட்டுப்புதூர் | சேலம் |
| 33 | தொடக்கப்பள்ளி , கருமந்துறை | சேலம் |
| 34 | தொடக்கப்பள்ளி, தாழ்வள்ளம் | சேலம் |

| | | |
|---|---|---|
| 35 | தொடக்கப்பள்ளி, பகுடுபட்டு | சேலம் |
| 36 | தொடக்கப்பள்ளி, ஆலாடிப்பட்டி | சேலம் |
| 37 | மேல்நிலைப்பள்ளி, டாப்செங்காட்டுப்பட்டி | திருச்சிராப்பள்ளி |
| 38 | மேல்நிலைப்பள்ளி, நம்மியம்பட்டு | திருவண்ணாமலை |
| 39 | உயர்நிலைப்பள்ளி, கோவிலாண்டூர் | திருவண்ணாமலை |
| 40 | உயர்நிலைப்பள்ளி, சு.கீழ்நாச்சிப்பட்டு | திருவண்ணாமலை |
| 41 | உயர்நிலைப்பள்ளி, ஆட்டியானூர் | திருவண்ணாமலை |
| 42 | உயர்நிலைப்பள்ளி, பட்டரைக்காடு | திருவண்ணாமலை |
| 43 | உயர்நிலைப்பள்ளி , அரசவெளி | திருவண்ணாமலை |
| 44 | மேல்நிலைப்பள்ளி, கோமுகிஅணை | விழுப்புரம் |
| 45 | மேல்நிலைப்பள்ளி, இன்னாடு | விழுப்புரம் |
| 46 | மேல்நிலைப்பள்ளி, மணியார்பாளையம் | விழுப்புரம் |
| 47 | உயர்நிலைப்பள்ளி, மூலக்காடு | விழுப்புரம் |
| 48 | உயர்நிலைப்பள்ளி, கிளாக்காடு | விழுப்புரம் |
| 49 | உயர்நிலைப்பள்ளி, பாச்சேரி | விழுப்புரம் |
| 50 | உயர்நிலைப்பள்ளி, எழுத்தூர் | விழுப்புரம் |
| 51 | உயர்நிலைப்பள்ளி, பரங்கி நத்தம் | விழுப்புரம் |
| 52 | உயர்நிலைப்பள்ளி, கொட்டப்புதூர் | விழுப்புரம் |
| 53 | மேல்நிலைப்பள்ளி, ஆனைக்கட்டி | கோயம்புத்தூர் |
| 54 | நடுநிலைப்பள்ளி, அரசமரத்துகொல்லை | திருப்பத்தூர் |
| 55 | தொடக்கப்பள்ளி, பள்ளக்கொல்லை | திருப்பத்தூர் |
| 56 | தொடக்கப்பள்ளி, சேம்பரை (புதூர்நாடு) | திருப்பத்தூர் |
| 57 | தொடக்கப்பள்ளி, நெல்லிப்பட்டு | திருப்பத்தூர் |

ஒட்டெம் டாய்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

21/12/2020
பிரிவு அலுவலர்.
21/12/2020